## தமிழ்நாடு அரசு
### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய பொருளாதாரம்

பகுதி : **பொருளாதார வளர்ச்சி (ம) மேம்பாடு**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# பொருளாதார வளர்ச்சி (ம) மேம்பாடு

## பொருளாதார முன்னேற்றம்

- தேசத்தின் உண்மை நிலையிலான பொருளாதார உற்பத்தியில் ஆதாரங்களின் உயர்வின் காரணமாகவும், கல்வி மூலமாகவும், மற்றும் ஆதாரங்களின் அளவு மற்றும் நுட்ப உயர்வு காரணமாகவும் உயர்வைக் காண்பதே பொருளாதார முன்னேற்றமாகும். வேறு விதத்தில் பொருளாதாரத்தின் ஒவ்வொரு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் புள்ளிகளின் மதிப்பு கூடுவதாகும். பொருளாதார முன்னேற்றத்தை ஒரு நாட்டின் வளரும் மொத்த உள்நாட்டு உற்பத்திலிருந்தும் அறியலாம்.

## பொருளாதார வளர்ச்சி

- 1950 வரை பொருளியலாளர்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டத் தவறி விட்டனர். இருப்பினும் உள்ள வேறுபாடுகள் அவர்களுக்குத் தெரியும். 1960களில் அதற்கு பின்னும் வந்த பத்தாண்டுகளிலும் பல்வேறு நாட்டைச் சேர்ந்த பொருளியலாளர்கள் பொருளாதார முன்னேற்றம் இருப்பினும் அவர்களின் வாழ்க்கைத்தரம் அதற்கிணையாக உயர்வதைக் கண்டனர். பொருளாதார வளர்ச்சிக்கு மாற்று இலக்கணம் கூற வேண்டிய காலம் வந்தது. பொருளியாலாளர்களுக்கு வளர்ச்சி என்பது வாழ்க்கைத் தரத்தின் உயர்வேயாகும். அது கீழ்கண்ட மாற்றுக் காரணிகளைக் கொண்டே அமையும்.

1. சத்துணவின் நிலை
2. விரிவாக்கப்பட்ட மக்களைச் சென்றடையும் ஆரோக்கிய வசதிகள் - மருத்துவமனைகள், மருந்துகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர், தடுப்பு முறைகள், துப்புரவு மற்றும் பிற.
3. மக்கள் மத்தியில் கல்வியின் நிலை
4. இன்னும் பிற காரணிகளையும் வாழ்க்கைத்தரம் சார்ந்துள்ளது.

- அதிகமான பொருளாதார வளர்ச்சிக்கு அதிகமான பொருளாதார முன்னேற்றம் தேவை. அதற்காக அதிகமான பொருளாதார முன்னேற்றம் தானாகவே பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு வந்து விடும் என்று பொருளாகாது.
- நாம் மாறுபட்ட சில முன்னேற்ற வளர்ச்சி நிலையினைக் காணலாம்.

1. அதிக முன்னேற்றம் மற்றும் அதிக வளர்ச்சி
2. அதிக முன்னேற்றம் ஆனால் குறைந்த வளர்ச்சி

3. குறைந்த முன்னேற்றம் ஆனால் அதிக வளர்ச்சி

- பொருளாதார வளர்ச்சி என்பது அளவிலும் தரத்திலும் பொருளாதார முன்னேற்றம் பெறுவது ஆகும். பொருளாதார முன்னேற்றத்தை உரிய விதத்தில் பயன்படுத்தி வளர்ச்சி கண்டால் அது மேற்கொண்டும் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தி மேலும் பெருகும். மக்கட்தொகைக்கு வளர்ச்சியை அளிக்கும். அதைப் போலவே அதிக முன்னேற்றம் ஆனது குறைந்த வளர்ச்சி மற்றும் சரியாகக் கவனிக்காத வளர்ச்சியில் முடியுமானால் முன்னேற்றம் வீழ்ச்சியடையும்.

### பொருளாதார வளர்ச்சியும் அமைப்பு முறை மாற்றமும்

- கணிதவழிப் பொருளியலாளர்கள் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் அமைப்பு முறை மாற்றங்களை அளவிட முயல்கின்றனர். கீழ்வருவனவற்றை முக்கிய மாற்றங்களாகக் கொள்ளலாம்.

### மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களின் உறுப்புகள்

- மிகப் பொதுவாக விழுக்காட்டுப் பங்கின் வருமானம் கூடுகையில் சேமிப்பு விகிதமும் கூடுகிறது. அரசு வருவாயும் (மற்றும் செலவும்) கூடுகிறது. உணவு நுகர்ச்சி குறைகிறது. உணவில்லாத பொருட்கள் நுகர்ச்சி கூடுகிறது. பணி மற்றும் தொழிற்சாலை பிரிவுகளின் முன்னேற்றம் ஏற்பட வேளாண் பிரிவில் முன்னேற்றம் காணப்படுகிறது.

### வேலைவாய்ப்பு மாற்றங்கள்

- வேலை வாய்ப்பு மாற்றங்கள், உற்பத்தி மற்றும் ஆக்க வள மாற்றங்களில் பிரிக்கப்படுகிறது. உற்பத்தி குறையும் வேகத்தில் முதன்மை துறையில் உழைப்பும் உழைப்பாளரும் குறைவதில்லை. இதன் பின்னோக்கு நிலை தொழிற்சாலை வேலை இன்மை நிலையைக் காட்டுகிறது. தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் இதன் மூலம் எளிதாக பாதுகாக்கப்படுகிறது.

### ஏற்றுமதி ஒன்றிணைத்தலில் மாற்றம்

- வளர்ச்சி ஏற்படுகையில் பெரும் பகுதியான வருமானத்திற்கு ஏற்றுமதி பொறுப்பாவதுடன், ஏற்றுமதியின் ஒன்றிணைவால் குறிப்பிடும் படியான மாற்றம் நிகழும்.
- முக்கியப் பொருள் உற்பத்தியினைப் போலவே தொழில் உற்பத்தியும் இணையாகக் கூடும். இறக்குமதியும் பெருகுவதுடன், பெறுவதும் - கொடுப்பதும் சமநிலை அடையும்.

### மக்கட்தொகை விகித உயர்வு

- வருமானம் கூடும் போது, மக்கட்தொகை பெரும் விகிதம் குறையுமென எதிர்பார்க்கலாம். பிறப்பு விகிதம் குறை வதுடன் இறப்பு விகிதமும் குறையும். மக்கட்தொகை பெருகுவதால், முன்னேற்ற விகிதம் படிப்படியாகவே குறையும்.

### வருமானப் பகிர்வு

- ஆரம்பத்தில் வருமானம் சமமற்ற முறையில் பகிரப்பட்டாலும், நாளடைவில் பின்னோக்கி நகரும். இது பின்னோக்கு 'U' வடிவ ஆதாரக் கருத்தாகும். இதனை திரு. சைமன் கஸ்நட்ஸ் எடுத்துரைக்கிறார்.

| | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|
| செயற்பண்பு | பொருளியல் அமைப்பு முறை மாற்றங்கள் குறித்தது. | முன்னேற்றம் பொருளாதார உற்பத்தி உயர்வு சார்ந்தது. |
| முன்னேற்றம் | வளர்ச்சியானது மனித மூலதனக் குறியீடுகள் (உயர்வு) முன்னேற்ற நிலையில் தாழ்வு மற்றும் பொதுமக்களின் தரமான வாழ்க்கைக்கான அமைப்பு முறை மாற்றங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையது. | முன்னேற்றம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏதாவதொரு உட்கூறில் படிப்படியாக உயர்வு நுகர்வு, அரசுச் செலவு, முதலீடு, நிகர ஏற்றுமதி ஆகியவற்றோடு தொடர்புடையது. |
| சம்பந்தமானது | இது வருமானத்தில் காணப்படும் மாற்றங்களைக் குறித்துக் காட்டுவதுடன், சேமிப்பு மற்றும் முதலீட்டுடன் நாட்டின் சமூகப் பொருளாதார அமைப்பில் ஏற்படும் மாற்றங்களையும்காட்டுகிறது.(நிறுவன மற்றும் தொழில்நுட்ப மாற்றங்கள்) | சேமிப்பில் வருமானத்தை உயர்த்தி, மூலதன உயர்வு போன்று, நாட்டின் உண்மை ஆக்க ஆதாரம் மூலம் பொருட்கள் மற்றும் பணி உற்பத்தியை உயர்த்துவதை இது குறிக்கிறது. |
| அளவு | தர நிலை மனிதவளர்ச்சிக்கு குறியீடு பாலினம் தொடர்பான குறியீடு, மனித வறுமைக் குறியீடு, குழந்தைகள் இறப்பு, கற்றோர் விகிதம் போன்றவை ஆகும். | எண்ணிக்கை அளவிலான மாற்றங்களை இது கொண்டு வருகிறது. |
| விளைவு | தரம் மற்றும் எண்ணிக்கை அளவிலான மாற்றங்களைப் பொருளாதரத்தில் இது கொண்டு வருகிறது. | எண்ணிக்கை அளவிலான மாற்றங்களை இது கொண்டு வருகிறது. |
| கருத்து | நெறியுரை கருத்து | பொருளாதார முன்னேற்த்தைக் காட்டிலும் குறுகிய கருத்து |
| தொடர்பு | வளர்ந்து வரும் நாடுகளில் முன்னேற்றம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை அறிந்திட பொருளாதார வளர்ச்சி மிகவும் உயருகிறது. | குறைந்த நாடுகளில் பொருளாதாரம் வளர்ச்சிக்கும் தொடர்புடையதாகவும் உள்ளது. ஆனால் எல்லை நாடுகளிலும் இது பின்பற்றப்படுகிறது. ஏனெனில் முன்னேற்றமே வளர்ச்சியில் தேவை |